க்ரோதி ஹூ பங்குனி மீ
மார்ச் - ஏப்ரல் 2025

மலர்: 7
இதழ்: 12

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





அன்னகூட உத்ஸவம்

க்ரோதி ஸூ பங்குனி மீ
மார்ச் - ஏப்ரல் 2025

மலர்: 7
இதழ்: 12

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தை பதியாக வாழ்வீர்காள்!

க்ரோதிவருடத்தின்கடைமாதமானபங்குனியின்அதிஷ்டானதேவதைகோவிந்தன்என்னும்திருநாமத்தை உடைய எம்பெருமான். ஸ்ரீகோவிந்தன் சந்த்ரனைப் போன்ற வெளுப்பு நிறமுடையவன் என்றும், பத்மம், சங்கம், கதை, சக்ரங்களை தரிப்பவன் என்றும், செந்தாமரை போன்ற கண்களையுடையவன் என்றும் சுத்தமான தங்கத்தினாலே செய்யப்பட்ட ஆபரணங்களையணிந்திருப்பவன் என்றும் ஆகமம் போற்றுகிறது.

பன்னிருநாமம் எனும் ப்ரபந்தத்தில், நாபிக்கமலத்தில் அவதரித்த ப்ரஹ்மாதொழ, அத்திமாமலைமேல் நின்ற புண்ய ஸ்வரூபனுமான பேரருளாளன், கோவிந்தனாகவும், நிறத்தில் எப்பொழுதும் குளிர்ந்த சந்த்ரனாகவும் இருந்து துஷ்டர்களைப் போக்குகின்ற நான்கு விற்களுடன், தெற்குத் திசையிலும், கழுத்தின் உட்புறத்திலும், நின்று சிறந்த கருணையால் பாபங்களைப் போக்கித் தம்மை அடிமைகொள்வான் என்று பாடி பக்திப்பரவசராகிறார் ஸ்வாமி தேசிகன்.

பால்குனம் எனும் சாந்த்ரமான மாதம் மருவி பங்குனி என்றாயிற்று என்பர் பெரியோர். பெருமாளுக்கும் பிராட்டிக்கும் பரிணயம் (திருமணம்) நடைபெறுவதால் இந்தப் பங்குனி மாதம் மிகவும் சிறப்புடையது என்று ஆன்றோர் பணிப்பர். ஒரு பங்குனி உத்திர உத்ஸவத்தன்று திவ்யதம்பதிகளின் சேர்த்தியில் நம்மிராமனுசன் எம்பெருமானை நாம் ஸுலபமாக அடையச்செய்விக்கும் சரணாகதி என்னும் உபாயத்தை தாம் அனுஷ்டித்து அவர் வழித்தோன்றல்களான நமக்கும் எவ்வாறு செய்யவேண்டும் என்பதை வழிநடத்திக் காட்டியருளினார்.

மேலும் இந்த மாதம் சாந்த்ரமான விச்வாவஸு வருடத்தின் தொடக்கமான சைத்ர மாஸம் சுக்ல ப்ரதமை தினத்தன்று ‘யுகாதி’ வருடப்பிறப்பாகக் கொண்டாடப்படும். இதேபோன்று சாந்த்ரமானத்தை ஆதாரமாகக் கொண்ட சக்ரவர்த்தித் திருமகனின் அவதார உத்ஸவமான ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் இந்தவருடம் பங்குனி மாதத்திலேயே கொண்டாடப்பட இருக்கின்றது.

மேலும் நம் ஆசார்ய பரம்பரையில் ஸ்ரீபராசரபட்டரின் சிஷ்யராகவும் ஸ்ரீஸூக்தத்திற்கு விளக்கவுரை தந்தவரும் திருவாய்மொழிக்கு உரையெழுதியவரும் ஸ்வாமி தேசிகனால் ‘பெரியஜீயர்’ என்று போற்றப்பட்டவருமான நஞ்சீயர் இந்த மாதம் பங்குனி மாதம் உத்திரத்தில் அவதரித்தவர். மேலும் ஸ்ரீபாஷ்யகாரரின் அத்யந்த சிஷ்யரும், இராமாநுச நூற்றந்தாதியை இயற்றியவருமான திருவரங்கத்தமுதனார் அவதரித்ததும் பங்குனியிலேயே (ஹஸ்தம்).

இப்படிச் சிறப்பு வாய்ந்த இம்மாதத்தில் ஸ்ரீஅழகியசெய்யூர் ஸ்வாமியின் சதமான ஸம்வத்ஸர மஹோத்ஸவம், கண்ணனின் பெருமை, திருவரங்கத்தமுதானார் வைபவம் இவற்றின் சிறப்பு வ்யாஸங்களுடனும், வழக்கமான ஆங்கில தொடர்களுடனும் க்ரோதி வருஷ பங்குனி மாதத்திய தேசிக சந்தேசம் உங்கள் கரங்களில்...

ஸ்ரீ:

# Divine Bliss In Panguni

## FROM THE DESK OF TRUSTEES

As we step into the divine month of Panguni, we take a moment to reflect on the spiritually uplifting events of Maasi, which filled our Devasthanam with fervor and devotion. By the boundless grace of Sri Srinivasa Perumal, Sri Alarmelmanga Thayar, and our revered Acharya, Sri Vedantha Desikar, we were blessed to witness and partake in several momentous occasions.

**Maasi highlights**

A landmark event in our temple's history was the release of the **'Sathamana Samvatsara Malar,'** a souvenir commemorating 100 years of Sri Srinivasa Perumal and Sri Alarmelmanga Thayar at our Devasthanam. The first copy was released by **Srimath 46th Azhagiyasinga, Sri Ranganatha Yathindra Maha Desikan** of Sri Ahobila Mutt and received by esteemed dignitaries, including **Senior Advocate Sri K. Parasaran, Sri N. Ravi (*The Hindu*), Sri Seshasayee, Sri Parthasarathy, Sri S. Ravindran, Sri K. Gopala Desikan,** among others.

On this grand occasion, we had the privilege of honoring the **past and present Archakas, Kainkaryaparas, Centenary Committee Members, Electoral Board Members,** and other distinguished contributors whose dedication has upheld the sanctity of our temple.

Another significant event was the **Dhavanotsavam,** celebrated with deep devotion over three days. The elaborate Thirumanjanam in the morning and Unjal Sevai in the evening provided devotees with divine blessings. The **Carnatic music concerts** by renowned artists further enriched the spiritual atmosphere, elevating the devotional experience for all who attended.

**Maasi Magham**

On this sacred day, Sri Srinivasa Perumal graced the devotees with a special Purappadu to the seashore for the Samudra Snanam. Accompanied by Vedic chants and Archanai, the deities were ceremoniously bathed, invoking divine blessings for prosperity, well-being, and spiritual upliftment.

Devotees took a holy dip in the sea, believing it to cleanse sins and grant immense spiritual merit. The event concluded with a grand return procession, filling the hearts of devotees with divine bliss.

This Maasi Magham Samudra Snanam is a profoundly spiritually enriching experience, drawing devotees closer to the divine grace of Sri Alarmelmanga Nayaka Sametha Sri Srinivasa Perumal and Swami Desikan.

**Utsavams in Panguni**

As we move forward, Panguni brings a series of grand Utsavams, offering devotees numerous opportunities to seek the divine blessings of Perumal and Thayar.

- **Panguni Utsava Thirukalyanam** – The sacred wedding ceremony of Sri Alarmelmanga Thayar and Sri Srinivasa Perumal will be performed with all Vedic traditions, signifying their divine union and bestowing prosperity and well-being upon devotees.
- **Pallava Utsavam, Ugadi Utsavam & 10-day Ramar Utsavam** will also be celebrated with grandeur.

We earnestly invite all devotees to participate in these sacred events and receive the divine grace of Perumal, Thayar, and Swami Desikan. Your continued devotion and support sustain the rich traditions of our temple, and we look forward to celebrating these Utsavams together.

May Sri Alarmelmanga Thayar Sametha Sri Srinivasa Perumal and Swami Desikan shower their blessings upon one and all, guiding us on the path of Dharma and Bhakti.

ஸ்ரீ:

# க்ரோதி வருட பங்குனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| மார்ச் / ஏப்ரல் | பங் குனி | | | | | |
| 15.03.2025 | 1 | ப்ரதமை | சனி | உத்திரம் | காலை தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை உள்புறப்பாடு | S.V.S. ராகவன் பண்ட் |
| 16.03.2025 | 2 | த்விதீயை | ஞாயிறு | ஹஸ்தம் | காலை பெருமாள் உத்ஸவர் திரு மஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு | ஸ்ரீ S. வரதராஜன் |
| 17.03.2025 | 3 | த்ருதீயை | திங்கள் | சித்திரை | மதுரகவிகள் | |
| 18.03.2025 | 4 | சதுர்த்தி | செவ்வாய் | ஸ்வாதி | ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஆஸ் தானம். பெரியாழ்வார் | |
| 19.03.2025 | 5 | பஞ்சமி | புதன் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 20.03.2025 | 6 | ஷஷ்டி | வியாழன் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 21.03.2025 | 7 | ஸப்தமி | வெள்ளி | கேட்டை | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு | ஸ்ரீ புரிசை R. ராமகிருஷ்ணன் |
| 22.03.2025 | 8 | அஷ்டமி | சனி | மூலம் | திருமால்வடை. பல்லவ உத்ஸவம் அங்குரார்ப்பணம் | நாவல்பாக்கம் ஸ்ரீ S. வெங்கடேசன் |
| 23.03.2025 | 9 | நவமி | ஞாயிறு | பூராடம் | ஸேனைநாதன். பல்லவ உத்ஸவம் 1-ம் நாள் | 1) ஸ்ரீ N.V.பாலாஜி & 2) ஸ்ரீ M.V. ஸந்தானம் |
| 24.03.2025 | 10 | தசமி | திங்கள் | உத்திராடம் | ஆளவந்தார். பல்லவ உத்ஸவம் 2-ம் நாள் | ஸ்ரீ S.S. ராகவன் & 2) ஸ்ரீ R. பார்த்தஸாரதி |
| 25.03.2025 | 11 | ஏகாதசி | செவ்வாய் | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு. ஆஸ் தானம். பல்லவ உத்ஸவம் 3-ம் நாள். சாற்றுமுறை | பல்லவ உத்ஸவம்: ஸ்ரீ R. முகுந்தன், 2) ஸ்ரீ V.P. ப்ரேம் குமார், 3) ஸ்ரீ T.C. ரங்கராஜன் 4) ஓங்கூர் ஸ்ரீ வாஸு தேவாச்சார் ஸ்ரீதரன். ச்ரவணம்: வஸந்த் ஷான்பாக் |
| 26.03.2025 | 12 | த்வாதசி | புதன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 27.03.2025 | 13 | த்ரயோதசி | வியாழன் | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. | S.V.S.K. அஸோஸி யேஷன் |
| 28.03.2025 | 14 | சதுர்தசி | வெள்ளி | பூரட்டாதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு | ஸ்ரீ S. பாலாஜி |
| 29.03.2025 | 15 | அமாவாசை | சனி | உத்திரட்டாதி | ராமர் உத்ஸவம் 1-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | ஸ்ரீ S. ஸுந்தரம் குடும்பத்தினர் |

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| மார்ச் / ஏப்ரல் | பங் குனி | | | | | |
| 30.03.2025 | 16 | ப்ரதமை | ஞாயிறு | ரேவதி | யுகாதி பண்டிகை. காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். மதியம் பஞ்சாங்க படனம். பொழுதுடன் ஆராதனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. ராமர் உத்ஸவம் 2-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | யுகாதி உத்ஸவம்: ஸ்ரீ கோபால க்ருஷ்ணன். பஞ்சாங்க படனம்: ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர். ராமர் உத்ஸவம்: ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி குடும்பத்தினர் |
| 31.03.2025 | 17 | த்விதீயை / த்ருதீயை | திங்கள் | அச்வினி | ராமர் உத்ஸவம் 3-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | ஸ்ரீ S. கோபாலன் |
| 01.04.2025 | 18 | த்ருதீயை / சதுர்த்தி | செவ்வாய் | பரணி | ராமர் உத்ஸவம் 4-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை. காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ M. சக்ரபாணி குடும்பத்தினர். C/O. ஸ்ரீ C. கேசவன் |
| 02.04.2025 | 19 | சதுர்த்தி / பஞ்சமி | புதன் | கிருத்திகை | ராமர் உத்ஸவம் 5-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | ஸ்ரீ K. ராமன் குடும்பத்தினர் |
| 03.04.2025 | 20 | ஷஷ்டி | வியாழன் | ரோஹிணி | ராமர் உத்ஸவம் 6-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை ஸேவா காலம் சாற்றுமுறை | ஸ்ரீ V.C. முரளிதரன் |
| 04.04.2025 | 21 | ஸப்தமி | வெள்ளி | ம்ருகசீர்ஷம் | ராமர் உத்ஸவம் 7-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | ஸ்ரீ ராம்ப்ரசாத் பார்த்தஸாரதி |
| 05.04.2025 | 22 | அஷ்டமி | சனி | திருவாதிரை | ராமர் உத்ஸவம் 8-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோஹன் |
| 06.04.2025 | 23 | நவமி | ஞாயிறு | புனர்வஸு | ராமர் உத்ஸவம் 9-ம் நாள். ஸ்ரீராம நவமி. காலை ராமர் மூலவர் உத்ஸவர் திருமஞ்ஜனம். பெருமாள் திருமொழி ஸேவாகாலம், சாற்று முறை. மாலை வீதிபுறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்ஜனம்: ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார் குடும்பத்தினர். ராமர் உத்ஸவம். ஸ்ரீமதி அம்புஜம் அனந்த ராமன் (V.D.R. பண்ட்) |

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| மார்ச் / ஏப்ரல் | பங் குனி | | | | | |
| 07.04.2025 | 24 | தசமி | திங்கள் | புஷ்யம் | ஸ்ரீ ராம பட்டாபிஷேகம். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம். ஊர்கோல உத்ஸவம். வீதிபுறப்பாடு | ஸ்ரீ K.J. சுகுமார் |
| 08.04.2025 | 25 | ஏகாதசி | செவ்வாய் | ஆயில்யம் | காலை பெருமாள் உத்ஸவர் திரு மஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ K. கோபால தேசிகன் |
| 09.04.2025 | 26 | த்வாதசி | புதன் | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 10.04.2025 | 27 | த்ரயோதசி | வியாழன் | பூரம் | ஆண்டாள் | |
| 11.04.2025 | 28 | சதுர்தசி | வெள்ளி | உத்திரம் | பங்குனி உத்திரம். காலை பெரு மாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் பத்தி உலாத்தல். இரவு திருக்கல்யாண உத்ஸவம். சேர்த்தி ஸேவை | ஸ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி |
| 12.04.2025 | 29 | பௌர்ணமி | சனி | ஹஸ்தம் | ஊர்கோல உத்ஸவம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள், தாயார், ஆண்டாள் உள்புறப்பாடு. பின்பு பெருமாள், ஆண்டாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி |
| 13.04.2025 | 30 | பௌர்ணமி / ப்ரதமை | ஞாயிறு | சித்திரை | காலை பெருமாள் உத்ஸவர் திரு மஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ T. ரகுநாதன் |

## வைணவ வழக்குச் சொற்கள் 7

**குழமணி தூரம்:** தோற்ற அரசனை மட்டந்தட்டுதல்; தோற்றவர்கள் ஆடவேண்டிய ஒருவகைக் கூத்து (தண்டனையாக)

**குழைச்சரக்கு:** பாதுகாக்கப்பட வேண்டிய பொருள்

**கூடஸ்தர்:** மூலபுருஷர்; தலைவர்; முதல்வராயிருப்பவர்

**கூப்பீடு கேட்குமிடம்:** திருப்பாற்கடல்

**கூழுக்காள்படுதல்:** சந்தோஷப்படல்

**கூம்பு:** கொடிமரம்

**கேடயம்:** பெருமாள் புறப்பாடாகும் ப்ரபையுடன் கூடிய பெரிய தொட்டி

**கேள்வி:** (ஆசார்ய) உபதேசம்

**கை கழிய:** நீக்கிவிட

**கைம்மா:** கஜேந்திரன்

**கையடை:** (1) அடைக்கலம்; (2) சூழ்ந்திருத்தல்

**கையார் சக்கரம்:** உத்ஸவத்திற்கு முந்திய நாள் (விஷ்வக்ஸேனர்) திருவீதி சோதனை

**கைதவம்:** (1) செம்மைக்கு எதிர்த்தட்டு; wrong practice; (2) கபடம்; (3) வஞ்சகம்

**கொத்து:** வேலை; staff; staffer; இனம்; கோவிலைப்பாதுகாக்கும் வீரர் குழு

**கொழுநன்:** நாயகன்

**கோயிலாழ்வார்:** ஸாளக்ராமம் அல்லது விக்ரஹம் இருக்கும் மரத்தாலான பெட்டி அல்லது சப்பரம்

கோயிலொழுகு: (1) கோயில் நடைமுறைகள்; temple procedure; ritual code; (3) ஸ்ரீ ரங்க ஆலய நடைமுறைகள் அனைத்தையும் விவரமாகக் குறிப்பிடும் நூல்

**கோஷ்டி:** (1) ஸந்நிதியில் திவ்ய ப்ரபந்தம் சேவிக்கும் பயிற்சியுடையவர் குழாம்; (2) ப்ரபந்த விரிவுரைகளை (காலக்ஷேபம்) தொடர்ந்து ச்ரத்தையுடன் கேட்டு மகிழும் (அனுபவிக்கும்) அறிஞர்கள் குழாம்

**கோஷ்டி விநியோகம்:** ப்ரஸாதம் வழங்குதல்

**கோன்:** ஸ்வாமி

**'தென்னிந்திய வைணவம் – ஓர் அறிமுகம்'** நூலிலிருந்து

***(தொடரும்...***

ஸ்ரீ:

# அகவை நூறு காணும் அழகியசெய்யூர் ஸ்வாமி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

மனிதனின் சராசரி வயது நூறு என்று நான்மறைகள் பரக்கப் பேசுகின்றன. அதிலும், ஒருவர் தமது வாழ்நாள் முழுவதும் ஞான, வைராக்ய, அனுஷ்டானத்துடன், வேறு எந்த சிந்தனையும் இல்லாமல், வேதாந்த விஷயங்களிலேயே அந்த நூறு வருஷங்களும் தம் சிந்தையில் நீங்காமல், பழுதற்ற பரமைகாந்தியாக இன்றும் திகழ்கிறார் என்றால், ஆச்சர்யப்படாமல் எப்படி இருப்பது?

அந்த பரமைகாந்தி ஸார்வபௌமர் வேறு யாருமல்ல. நம் ஸந்நிதியில் பல ஆண்டுகளாக எம்பெருமானின் திருமேனியைத் தீண்டும் உன்னதமான அர்ச்சக கைங்கர்யம் செய்து வந்த மஹாவித்வான் ஸ்ரீ உ.வே. அழகியசெய்யூர் ஹஸ்திகிரிநாதமுடும்பை சித்ரா பார்வம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி தான்.

ஸத்தான குலத்தில், நூறு வருடங்களுக்கு முன்பு, பேரருளாளனின் தயைக்கு இலக்கான திருக்கச்சி நம்பியின் அவதார தினமான மாசி ம்ருகசீர்ஷ நக்ஷத்ரத்தில் அவதரித்தவர் நம் ஸ்வாமி. தம் திருக்கப்பனாரிடத்திலேயே பாலபடங்களை அதிகரித்து, காஞ்சியில் 'ப்ரஹ்மசாரி பாடசாலை' என்று அந்நாளில் புகழ்பெற்ற ஸ்தாபனத்தில் வேதத்தை அத்யயனம் செய்தார்.

பின்பு, ஸ்ரீமதஹோபிலமடம் 42-ம் பட்டம் அழகிய சிங்கர் தொடங்கிய மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாசாலையில் ந்யாய சாஸ்த்ரம் உத்தம ரீதியில் பயின்று, பின்னர் அவ்வழகியசிங்கரிடத்திலும், 43-ம் பட்டம் அழகியசிங்கர் திருவடிகளிலும் வேதாந்த சாஸ்த்ரம் திரு எவ்வளூரில் காலக்ஷேபம் செய்து, தம்முடைய ஞான பாகத்தை விகஸித்துக் கொண்டார்.

சிறுவயது முதலே, தம் திருத்தகப்பனார் உள்பட பல பெரியவர்களிடம் பழகியதன் பொருட்டு, பஞ்சகால பராயணராக இருந்த இந்த ஸ்வாமி,





தம்முடைய பரஸமர்ப்பண ஆசார்யரான 43-ம் பட்டம் அழகியசிங்கருக்கு மஹானஸ கைங்கர்யம் போன்ற பல ஏகாந்தமான கைங்கர்யங்களையும் செய்து ஸத்தைப்பெற்றவர்.

தம்முடைய அம்மானான புதுச்சேரி தட்டை துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியிடம் ஸ்ரீபாஞ்ச ராத்ர சாஸ்த்ரங்களை அதிகரித்த அழகியசெய்யூர் ஸ்வாமி, ஸ்ரீஅஹோபிலம் முதற்கொண்டு பல திவ்ய தேசங்களில் எம்பெருமானின் பல கைங்கர்யங்களில் ஈடுபட்டதோடல்லாமல், ஆகம விஷயமாக பற்பல நூல்களை வெளியிட்டும், பல சிஷ்யர்களுக்கு ஆகமத்தை சொல்லிக் கொடுத்தும், ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு பெரும் தொண்டாற்றி வருகின்றார்.

இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரிடம் தாம் பயின்ற வேதாந்த சாஸ்த்ரத்தை இன்றளவும் தம்மை அண்டிவரும் சிஷ்யர்களுக்கு விஷயதானம் செய்தருளிகின்றார் நம் ஸ்வாமி. அவ்வழகிய சிங்கரின் நியமனப்படி, அச்சுக்கூடத்தை ஏற்படுத்தி, இன்றளவும் தம்மை நாடிவரும் அன்பர்களுக்கு பத்திரிகைகளை அச்சுப்படுத்தி, அவர்களின் அன்பிற்கும் இலக்காகின்றார்.

இவருக்கு, இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரே 'உண்ணுஞ் சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலை' என்றால் மிகையாகாது. ஸ்வாமியின் ஞானபாகத்தை மெச்சும் வகையில், 'அஹோபில மடம் ஆஸ்தான வித்வான்', 'பாஞ்சராத்ர பஞ்சாஸன', 'வைஷ்ணவ ஆகமரத்ன', 'ஆகம கல்பத்ரும', 'ஆகம த்யுமணி'



போன்ற பல விருதுகளை பல பெரியோர் ஸ்வாமிக்குத் தந்தருளினர்.

இவ்வளவு பெருமைகளும் தன்னிடத்தே கொண்டதையும், தம்முடைய தேவியாருடன் நூறு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருப்பதையும் கணிசித்து, ஸ்வாமியின் குடும்பத்தினரும், சிஷ்யர்களும், அபிமானிகளும், இவ்வருடம் ஸ்வாமிக்கு நூறாவது திருநக்ஷத்ரமாகையால் இந்த நூற்றாண்டு விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று விழைந்தனர்.

அதன் ஒரு பகுதியாக, ஸ்வாமி வேதாந்த சாஸ்த்ரத்தில் மஹாவித்வானாகவும், ஆகம சாஸ்த்ரத்தில் அதிநிபுணராகவும் இருப்பதை கணிசித்து, கடந்த க்ரோதி வருடம் மாசி மாதம் 10 மற்றும் 11 (22.02.2025 - 23.02.2025) ஆகிய நாட்களில், க்ரந்த சதுஷ்டயங்களான ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், ரஹஸ்யத்ரய ஸாரம், பகவத்விஷயம் மற்றும் ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரங்களில் ‘ஸ்ரீரங்க சடகோப வித்வத் ஸபை’ எனும் ஸதஸ் நம் தேவஸ்தானத்தில் நடைபெறுமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீ ஸ்வாமியின் சதமான மஹோத்ஸவத்தை முன்னிட்டு, ஸ்வாமியின் திருமாளிகையில் சதுர்வேத பாராயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ருக், சுக்ல யஜுர், ஸாம, க்ருஷ்ண யஜுர் வேத பாராயணம் முறையே 26.02.2025 முதல் 05.03.2025 வரை பல்வேறு வேத விற்பன்னர்களால் ஓதப்பட்டது. குறிப்பாக, ஸ்வாமியின் ஸ்வசாகையான க்ருஷ்ண யஜுர்வேதம், நான்கு நாட்கள் சராசரியாக 30 திருநாமங்களைக் கொண்டு ஓதப்பட்டது, மிகவும் போற்றத்தக்கதாக அமைந்தது. இதேபோல், ஸ்ரீமத்ராமாயண பாராயணமும் ஸ்வாமியின் திருமாளிகையில் செய்யப்பட்டு வைபவத்தை மேலும் சிறப்பித்தது.

பாகவத ஆராதனையை மிகுந்த கவனத்துடன் ஆதரிக்கும் நம் ஸ்வாமி, இந்த திருநக்ஷத்ர வைபவங்களில் அலங்கரித்த அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் சிறந்த முறையில் ததீயாராதனம் செய்வித்து அருளினார்.

07.03.2025 அன்று, மாசி ம்ருகசீர்ஷம். ஸ்வாமியினுடைய சதமான மஹோத்ஸவம் வேதாந்த தேசிக கல்யாண மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று காலை, ஸ்வாமியும் ஸ்வாமி தேவிகளும் தமது வயதை பொருட்படுத்தாமல் மிகுந்த உத்ஸாகத்துடன் மேடைக்கு எழுந்தருளி, நித்ய கர்மாநுஷ்டானங்களான ஔபாஸனாதிகளைச் செய்தனர்.

பல திவ்யதேசங்களிலிருந்து அர்ச்சக ஸ்வாமிகள், அந்தந்த எம்பெருமான்களின் ப்ரஸாதங்களை எடுத்துக்கொண்டு, நம் தேவஸ்தானத்திலிருந்து குடை, சாமரங்களுடன் புறப்பாடு கோலாகலமாக நடைபெற்று, கல்யாண மண்டபத்தை அடைந்தனர். ஜப ஸூக்தாதிகளின் பாராயணத்திற்குப் பிறகு, ஸ்வாமிக்கும் தேவிகளுக்கும் நாநா திவ்யதேச எம்பெருமான்களின் ப்ரஸாதங்கள் அனுக்ரஹிக்கப் பட்டன.

நூற்றுக்கணக்கான ஆஸ்திகர்கள், நூறு வயதை எட்டிய ஸ்வாமியினிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். ஸ்வாமியும் தேவிகளும், தமது அசக்தியை பொருட் படுத்தாமல், மிகுந்த பொறுமையுடன் அனைவருக்கும் ஆசீர்வாதம் வழங்கினர்.

‘காரியம் நல்லனகள் அவைகாணில் நம் கண்ணனுக்கு’ என்று கருதும் ஸ்வாமி, நம் ஸந்நிதியில் எழுந்தருளி யிருக்கும் திருக்கச்சி நம்பிகளின் திருநக்ஷத்ரத்தை, இவ்வருடமும் தமது சதமான உத்ஸவத்தன்று மிகுந்த போற்றத்தக்க முறையில் உபயம் செய்வித்தார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த இந்த ஸ்வாமிக்கும் தேவிகளுக்கும், திருவேங்கட திவ்யதம்பதிகளும் ஸ்வாமி தேசிகனும் தமது கருணையை பொழிவிக்குமாறு ப்ரார்த்திப்பதே நமது கடமையென எழுதி அமைகிறேன்.

ஶ்ரீ:

# நம் ஸந்நிதியின் பீஷ்ம பிதாமஹர்

‘சதாயு: புருஷ:’ என்றும், ‘வேத நூல் பிராயம் நூறு’ என்றும் நம் மறைகள் கூறும் மனித ஆயுள் நூறை எட்டியவர்; ஸ்ரீமதஹோபில மடத்தின் ஆஸ்தான வித்வானாகவும், பாஞ்சராத்ர ஆகமத்தில் தலை சிறந்த அதிகாரியாகவும், உபயவேதாந்த ப்ரவசனம் செய்யும் உத்தமாசார்யராகவும், இன்றளவும் யௌவன வேகத்துடன் கார்யங்களை செய்து வருபவர் ஸ்ரீ உ.வே. அழகியசெய்யூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி என்கிற அழிசூர் ஸ்வாமி.

அனைத்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஆசார்யர்களால் பல விருதுகளால் பஹுமானிக்கப்பட்ட இந்த ஸ்வாமி, பாரத ப்ரதமரின் ‘மன் கீ பாத்’ நிகழ்ச்சியில் முன்னோடியாக போற்றப்பட்டவர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் இவரை அறியாதவர் யாரும் இருக்க முடியாது.

இவர் நம் மாடமாமயிலையில் கோயில் கொண்டுள்ள, ‘அகலகிலேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பனாக’ எழுந்தருளியுள்ள ஸ்ரீநிவாஸனுக்கும், தமிழ்த்தலைவனான பேயாழ்வாருக்கும், மாறன் துணையடிக்கீழ் வாழ்வையுகக்கும் ராமானுஜ முனி வண்மை போற்றும் சீர்மையனுமான ஸ்வாமி தேசிகனுக்கும் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக திருவாராதன கைங்கர்யம் செய்து வந்துள்ளார்.

இன்று நம் தேவஸ்தானத்தில் கொண்டாடப்படும் பல உத்ஸவங்களை நடத்த, ஆரம்ப நாட்களிலேயே அந்தந்த ஸமயத்தில் வழிவகுத்தவர் இந்த ஸ்வாமி. நம் தேவஸ்தானத்தில் நடைபெற்ற மூன்று ஸம்ப்ரோக்ஷண வைபவங்களையும், ஐந்து ஸஹஸ்ர கலசாபிஷேகங்களையும் முன்னின்று நடத்தி வைத்தவர்.

இந்த ஸ்வாமியின் சதமான மஹோத்ஸவம், இவரது சிஷ்யர்களாலும் குடும்பத்தினராலும், இவரது வைதுஷ்யத்திற்குத் தகுந்தவாறு வித்வத் ஸதஸ், நான்கு வேத பாராயணம் முதலிய நிகழ்வுகளுடன் மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது.

வித்வத் ஸதஸ்ஸை தனது ஆசார்யரான ஸ்ரீமத் இஞ்சிமேடு அழகியசிங்கர் பெயரில் நடத்தவேண்டும் என்று ‘ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப வித்வத் ஸபை’ என ஸ்வாமி திருவுள்ளப்பட்டார். இவ்விதமாக, இந்த வித்வத் ஸதஸ் 22-02-2025 மற்றும் 23-02-2025 ஆகிய இரண்டு தினங்களாக, க்ரந்த சதுஷ்ட்யம் மற்றும் பகவத் சாஸ்திரம் எனப்படும் பாஞ்சராத்ர ஆகம விஷயமாக ஐந்து பகுதிகளாக நடைபெற்றது.

22-02-2025 அன்று நடைபெற்ற முதல் நிகழ்வான ஸ்ரீபாஷ்ய வித்வத் ஸதஸ்ஸிற்கு தேவனார்விளாகம் ஸ்ரீ உ.வே. பத்மநாபாசார்ய ஸ்வாமி மற்றும் வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம் ஸ்ரீ உ.வே. கருணாகராசார்ய ஸ்வாமி அத்யக்ஷர்களாக இருந்தனர்.

அடுத்து நடைபெற்ற ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம ஸதஸ்ஸிற்கு ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸ்வாமி மற்றும் Dr. ராஜேஷ் ஸ்வாமி அத்யக்ஷர்களாக இருந்தனர். மாலை நடந்த ரஹஸ்யத்ரயசாரம் ஸதஸ்ஸிற்கு ஸ்ரீ உ.வே. ஆடூர் மாதவாச்சார்ய ஸ்வாமி மற்றும் பழவேரி ஸ்ரீ உ.வே. பாலாஜி ஸ்வாமி அத்யக்ஷர்களாக இருந்தனர்.

23-02-2025 காலை நடந்த ஸ்ரீ கீதாபாஷ்ய ஸதஸ்ஸிற்கு சோகத்தூர் ஸ்ரீ உ.வே. ராமானுஜாசார்ய ஸ்வாமி, நாவல்பாக்கம் வலையப்பேட்டை ஸ்ரீ உ.வே. ராமாசார்ய ஸ்வாமி, மற்றும் நாவல்பாக்கம்





ஸ்ரீ உ.வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி அத்யக்ஷர்களாக இருந்தனர். அதற்குப் பின்னர் நடைபெற்ற பகவத்விஷயம் ஸதஸ்ஸிற்கு வடுவூர் ஸ்ரீ உ.வே. வீரராகவாசார்ய ஸ்வாமி மற்றும் நாவல்பாக்கம் ஸ்ரீ உ.வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி அத்யக்ஷர்களாக இருந்தனர்.

ஸபையில் வாக்யார்த்தம் செய்தவர்கள் தமிழும் ஸம்ஸ்க்ருதமும் கலந்த மணிப்ரவாள நடையில் PowerPoint Presentation மூலம் விஷயங்களை விளக்கினர். இதன் மூலம், விவாதிக்கப்பட்ட அனைத்து விஷயங்களும் பாமர மக்களுக்கும் எளிதில் புரிந்துகொள்ளும்படி அமைந்தன.




இந்த நூறாவது திருநக்ஷத்ரத்திலும் ஸ்வாமி நித்யபடி வேதாந்த காலக்ஷேபம் நடத்தி வருவதையும், இந்த வயதிலும் எம்பெருமான் திருக்கோயில்களின் ஆகம ப்ரதிஷ்டை, ஸம்ப்ரோக்ஷணம் முதலிய கைங்கர்யங்களை தொடர்ந்து செய்து வருவதையும் அத்யக்ஷர்கள் அதிசயித்துப் போற்றினர்.

இரண்டாம் நாள் மாலை, முகுந்தகிரி ஸ்ரீ உ.வே. அனந்தபத்மநாபாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம் 'ஸ்ரீ பீஷ்ம ஸ்துதியும் ஸ்ரீமத் இஞ்சிமேடு அழகிய சிங்கரும்' என்ற தலைப்பில் நடைபெற்றது. ஸ்ரீ பீஷ்ம ஸ்துதியை ஸ்ரீமத் அழகியசிங்கரின் அனுபவங்களோடு இணைத்து வழங்கியது ரஸிக்கும் படி அமைந்திருந்தது.

அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து வழங்கியதில், தேவனார்விளாகம் ஸ்ரீ உ.வே. பத்மநாபாசார்ய ஸ்வாமியும், முகுந்தகிரி ஸ்ரீ உ.வே. அனந்தபத்மநாபாசார்ய ஸ்வாமியும் முக்கியப் பங்கு வகித்தனர். அவர்களை ஸ்ரீ அழிசூர் ஸ்வாமி கௌரவித்துப் பாராட்டினார்.

- தேவஸ்தானம்

நம் திருக்கோயிலில் நடை பெறும் உத்ஸவங்களின் தொகுப்பினை நேரலையில் அல்லது பதிவு செய்து காண உருவாக்கப்பட்ட ப்ரத்யேக சேனல்.

**இன்றே SUBSCRIBE செய்யுங்கள்**







## அன்னகூட உத்ஸவம்





ஸ்ரீ:



அன்னகூட உத்ஸவம்





அன்னகூட உத்ஸவம்






**அன்னகூட உத்ஸவம்**







அன்னகூட உத்ஸவம்



## குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்







## சதமான மஹோத்ஸவ மலர் வெளியீட்டு விழா






















## சதமான மஹோத்ஸவ மலர் வெளியீட்டு விழா













## சதமான மஹோத்ஸவ மலர் வெளியீட்டு விழா








ஸ்ரீ:

# சதமான ஸம்வத்ஸர மஹோத்ஸவ மலர் வெளியீடு

திருமயிலையில் ஆசார்ய வள்ளலாம் ஸ்ரீ வேதாந்த தேசிகன் நித்யவாஸம் செய்துவரும் ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸப்பெருமாளின் சதமான ப்ரதிஷ்டா தின (சித்திரை - ஹஸ்தம்) மஹோத்ஸவம் 22.04.2024 அன்று மிக விமர்சையாக நிறைவுபெற்றது. இதன் அங்கமான மலர் வெளியீட்டு விழா ஸ்ரீமதஹோபிலமடம் திவ்யாஸ்தானத்தை அலங்கரிக்கும் 46-ம் பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹா தேசிகன் ஆத்யக்ஷத்தில் 18.02.2025 அன்று ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஹாலில் (வேங்கடேச அக்ரஹாரம்) பாரோர் வியக்கும்படி நடந்தேறியது.

வேத கோஷத்துடனும், இன்னிசையுடனும் விழா தொடங்கியது. பின்னர், ஸ்ரீமத் அழகியசிங்கர் தம் ஹஸ்த விசேஷத்தால் சதமான உத்ஸவ மலரை வெளியிட, நூற்றாண்டு விழா கமிட்டியின் சேர்மன் மற்றும் இந்திய அரசாங்கத்தின் முன்னாள் அட்டார்னி ஜெனரல் ஸ்ரீ உ.வே. பராசரன் ஸ்வாமி முதல் ப்ரதியைப் பெற்றுக்கொண்டார்.

இந்த விழாவில் நம் தேவஸ்தானத்தில் கைங்கர்யம் செய்த முன்னாள் அர்ச்சக, பரிசாரக, மற்றும் இதர கைங்கர்யபரர்களுக்கும், தற்போதைய



கைங்கர்பரர்களுக்கும் தங்கக்காசு, உயர்த்தியான சால்வை, நினைவுச்சின்னம் (memento) ஆகியவை ஸ்ரீமதழகியசிங்கர் திருமுன்பு ஸம்மானிக்கப்பட்டது.

இந்த விழாவில் சதமான உத்ஸவ கமிட்டியின் இதர அங்கத்தினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழாவினை நம் தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாக்கள் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். விழாவில் கலந்துகொண்ட அனைவரும் கைங்கர்யபரர்களையும் கமிட்டியின் அங்கத்தினர்களையும் தர்மகர்த்தாக்கள் கௌரவித்ததை மிகவும் ச்லாகித்துக் கொண்டாடினர். ❇



ஸ்ரீ:

# ஆலின் இலையாய் அருள் - 2

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

பாலாலிலையில் துயில் கொண்ட பரமன் வலைப்பட்டிருந்த ஆழ்வார்களின் அநுபவம் தொடர்வோம்!!

திருச்சந்த விருத்தம் செய் திருமழிசைப்பரன்

*பண்டுமின்றும் மேலுமாய் ஓர் பாலனாகி ஞாலமேழ்*
*உண்டு மண்டி ஆலிலைத் துயின்ற ஆதிதேவனே*

என்று சந்தம் இசைத்து அன்று இன்று என எக்காலத்திற்கும் இவனே ஆதிதேவன் என்று இவனது பால உருவைப் பாடி மகிழ்ந்ததுடன் அந்தாதியாகப் பாடுகின்றபோதும் **பாலில் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும் ஆலில் துயின்றதுவும் ஆரறிவார் ஞாலத்து ஒரு பொருளை** என்று திருப்பாற்கடலிலும், திருவரங்கத்திலும், ஆலின் இளந்தளிரிலும் கண்வளர்ந்தருளும் அவனே ஆதியானவன் ஜகத்காரணன் என்கிறார்! அவனே காட்டியருள யானறிந்தேன் என்று இம்மெய்ப்பொருளை ஐயந்திரிபற அழுத்தமாக உரைக்கிறார்!

அடுத்து, இக்கூற்றினை ஆமோதிக்கும் வண்ணம் அரங்கத்தெம்பெருமானை மட்டுமே பேசும் **தொண்டரடிப்பொடியாரும் அழைக்கின்றேன் ஆதிமூர்த்தி** என்று பாடியருளினார்! **அரங்கமா கோயில் கொண்ட அக்கரும்பினைக் கண்டுகொண்டு என் கண்ணிணை களிக்குமாறே என்றும் உடலெனக்கு உருகுமாலோ** என்றும் முதலில் மகிழ்ந்து பாடியவர் தொடர்ந்து

**இனிதிரைத்திவலை மோத எறியும் தண் பரவை மீதே தனிகிடந்தரசு செய்யும் தாமரைக் கண்ணன் எம்மான் கனியிருந்தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள் பனி அரும்பு உதிருமாலோ என் செய்கேன் பாவியேனே.**

என்று மாற்றியல்லவோ பாடுகிறார்! ஏன்? **அரவரசப்** பெருஞ்சோதி அனந்தன் என்னும் திருவணையில் அணைப்புண்டு அரங்கத்தில் அடியார்கள் சூழ **கிடந்ததோர் கிடக்கை கண்டு** களித்த கண்களில் உடனே கண்ணீர் அரும்புவானேன்?

அன்றொருநாளில் ப்ரளய காலப் பெரு வெள்ளத்தில் இவ்வரங்கனே பச்சிளம் பாலகனாய் ஓராலிலை மேலே செவ்வாயில் தன் திருவடி பொருத்திச் சுவைத்தபடி ஆள் **அரவம்** அற்று தனிமையில் ஸயனித்துக் கிடந்த அந்நிலையை நினைத்து விட்டார் போலும்! எனவேதான் உடலும் உள்ளமும் உருக பனி **அரும்புதிருமாலோ** எனப் பாடினாரோ? இவ்வழகுக்கு என் வருமோ என்று வயிறு பிடிக்கும் இயல்பன்றோ இவ்வாழ்வார்களின் இயல்பு!

முதலில் மகிழ்ந்து பின்னர் உளமுருகப்பாடிய இவ்வாழ் வாருக்கு மாறாக முதலில் வருந்திப்பாடியவரைப் பின்னர்மகிழ்ந்து பாடச்செய்தவனும்இவ்வாலினிலைப் பிரானே! **துய்ய குலசேகரன்** பெற்ற **அநுபவமிது! ஏலவார் குழல் என்மகனே மன்னவனே தாலேலோ** என்று தாலாட்டு பாடும் திருவினை இழந்தேனே என்று தேவகியாகப் புலம்பிய இவ்வாழ்வாரும் தொடரும் அடுத்த பதிகத்திலேயே இவ்வாலிலைச் சிறுவனைப்பாடி மகிழ்வதுதான் என்னே! **ஆலினிலைப் பாலகனாய் அன்றுலகம் உண்டவனே** என்றும் **எங்கள் குலத்தின்னமுதே இராகவனே தாலேலோ** என்றும் கண்ணனையே காகுத்தனாக்கித் தாமும் மன்னுபுகழ் கௌசலையாகித் தாலாட்டியதால் தாகம் தணிந்து மகிழ்ந்தது ஆழ்வாரின் அத்தாயுள்ளம்!

**நம்மாழ்வாரின்** நிலை நாமறிந்ததுதான்! **பிறந்தவாறும் வளர்ந்தவாறும்** என்று இவ்விடைப்பிள்ளையைப் பற்றி எண்ணிய காலத்திலும், வெண்ணெய்க்களவு செய்து கட்டுண்டு உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவினை எண்ணிய காலத்திலும் மாதக் கணக்கில் மோஹித்துக் கிடக்கும் தன்மையுள்ள இவ்வாழ்வாருக்கு க்ஷீராப்தியில் இவனது ஸயனம் பற்றிக் கேட்டாலே **காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்** என்ற நிலைமை!

அங்ஙனிருக்க இவ்வாலிலைப் பிள்ளையைப் பற்றி எண்ணிவிட்டால்? தம் நிலை மாறி மென்மையுள்ள பெண்ணின் நிலையைப் பெற்றுவிடுகிறார் நம் ஆழ்வார்! இதுதான் இவரது ப்ரேமத்தின் எல்லைநிலம்!

**ஆலின் நீளிலை ஏழுலகம் உண்டன்று நீ கிடந்தாய்! உன் மாயங்கள் மேலை வானவரும் அறியார்** என்னும்போது அபலைகளான எங்கள் நிலைதான் என்ன என்றபடி ஊடல் கொண்ட இப்பராங்குசநாயகி கையறு நிலையை எய்தியதில்தான் என்ன வியப்பு?

இப்படி மின்னிடை மடவாராகி ஊடல் கொண்டதுபோல் பின்னொரு சமயம் அவன் பிரிவால் வாடி **உன் தாமரை புரை கண்ணிணையும், செவ்வாய் முறுவலும் ஆகுலங்கள் செய்ய (எம்மை வருந்தச்செய்ய)**

**அழிதற்கே நோற்றோமே என்று வருந்தி** நிற்கும் தலைவியின் தாயாகிப் பாடுகையிலும் ஆழ்வார் இவ்வாலிலையானை மறந்தாரில்லை!

பெண்ணின் வருத்தம் அறிந்து அதனைப் போக்கும் வழியறியாது புலம்புகிறாள் இத்தாய்

**பாலனாய் ஏழுலகுண்டு பரிவின்றி ஆலிலை அன்னவசம் செய்யும் அண்ணலார் தாளிணை மேலணி தண்ணந்துழாயென்றே மாலுமால் வல்வினையேன் மடவல்லியே** என்று பாடுகிறாள்! ஆலிலை மேல் பள்ளி கொண்ட குழவியின் திருவடியில் உள்ள திருத்துழாய் வேண்டுமென்கிறாள் என் பெண்! தற்காலத்தில் இருப்பவர்களுக்கு ப்ரளயமாகிற அக்காலத்தில் இருந்த குழந்தையின் திருவடியில் இடப்பட்ட திருத்துழாயைத்தான் நம்மால் பெற முடியுமோ என்று அங்கலாய்க்கிறாள் இத்தாய்!

அத்துடன் அக்குழந்தையைக்கண்டு வியந்தும் பேசுகிறாள்! எடுத்தது சிறு குழவி உருவம்! உண்டதோ ஏழுலகம்! இதை சாப்பிடலாமா கூடாதா என்று தெரியாமல் எதிரில் உள்ளதை எடுத்து உண்ணும் பழக்கம் குழந்தைகளுக்கு உண்டு! எனவே இப்படி இவ்வுலகனைத்தையும் உண்பதற்காகத்தான் இக்குழந்தை வடிவோ என்று இத்தாய் கேட்டு வியப்பதாக விவரிக்கிறார் ஸ்ரீ அபிநவதேசிகன் ஸ்வாமி! தன் உடைமை என்பதால் அதைத் தாமே விழுங்கிக் காத்தவனின் அபிமானத்தை எண்ணியதால் அவன் திருவடித் திருத்துழாய் வேண்டுமென்று பராங்குச நாயகி ஆசைப்படுவதாக இத்தாய் பேசியதை ஆசார்யர் ஸ்ரீ உத்தமூர் ஸ்வாமி விவரிப்பது அற்புதமான எழுத்தோவியம்!

ப்ரேமத்தில் பெண் பேச்சு பேசும் இவர் ஞானத்தில், தாமான தன்மையில் பேசும்போது இவ்வாலிலைப் பிரானிடம் வேண்டுவதும் ஒன்றுண்டு!

*சூது நான் அறியாவகை சுழற்றி ஓர் ஐவரைக்காட்டி, உன்அடிப்*
*போது நான் அணுகாவகை செய்து போதிகண்டாய்*
*யாதும் யாவருமின்றி நின்னகம்பால் ஒடுக்கி ஓர்ஆலினீளிலை*
*மீதுசேர் குழவி! வினையேன் வினைதீர் மருந்தே!*

என்று பாடுகிறார்! உலகனைத்தையும் உண்டபின் தம் உடம்பை ஒடுக்கிக்கொண்டு ஓர் ஆலிலையில் சிறு குழந்தையாய் கிடந்த நீ எனக்கொன்று செய்வாய் என வேண்டுகிறார். என் ஐம்புலன்களும் உன் திருவடியை நான் அணுகாதபடி என்னைத் துன்புறுத்துகின்றன. யாதும் யாவருமின்றி இவ்வுலகையே ஒடுக்கித் தன் வயிற்றில் அடக்கிக் கொண்ட நீ என் புலன்களையும் அடக்கி என் தீவினைகளையும் ஒழிப்பாய் எனவேண்டுகிறார்! **உடனவை ஒக்க விழுங்கி ஆலிலைச் சேர்ந்தவன் என் அம்மான்** என்று பாடுகிறார்!

ஒருபத்திரம் (அடிமை சாஸனம்) எழுதப்பெற்று அதிலே முத்திரையும் இடப்பட்டுள்ளது!

வட பத்ரத்தில் (ஆலிலை) இவன்! இது என்னை அடிமை கொள்ளும் பத்திரம்! இதன் மேல் சொத்துக்கு உடையவனின் முத்திரை! தன்னையே முத்திரையாகப் பதித்துக் கொண்டுவிட்டான் என்று அகமகிழ்கிறார்!

இதுவே ஆலினிலையான் நமக்குக் காட்டித் தரும் தத்வம்! நமக்கும் அவனுக்குமான ஸ்வம் ஸ்வாமி ஸம்பந்தம்!

இவர் இம்மாயன் திருவடிமேல் உரைத்த தமிழ் ஆயிரத்தில் தமிழின் வளம் காட்டும் வார்த்தை ஒன்றினை அறிந்து மகிழ்வோம்! திருக்கண்ணபுரத்து **ஆலின் மேல் ஆல் அமர்ந்தான் அடி இணைகளே** என்று அருளிச்செய்கையில் ஆல் என்னும் சொல்லை இருபொருள்படப் பாடுகிறார்!

ஆல் என்பதற்கு ‘‘**பூவும், நீரும், ஒருமரப்பெயரும், ஆழ்கடல், விடமும், ஆலமாகும்**’’ என்கிறது பிங்கல நிகண்டு! அதாவது ஆல் என்னும் சொல்லுக்கு **நீர்,** மரம், நக்ஷத்ரம், பூதம், வடம் (ஆலமரம்) விஷம் எனப்பல பொருள்கள் உண்டு என்கிறது அந்த அகராதி! அதன்படி இவ்விடத்தில் ஆலின் மேல் என்றதற்கு நீர் மேல் எனப்பொருள் கொள்ளல் வேண்டும். மழைத்துளி கட்டி கட்டியாக விழுந்தால் அதை (ஆலங்கட்டிமழை என்று சொல்கிறோமே) இரண்டாவதான ஆல் என்னும் சொல்லை ஆழ்வார் **இடம்** என்னும் பொருளில் அமைத்து ஆலின்மேல் - நீரின்மேல், (உள்ள) ஆல் – ஆலிலையில் அமர்ந்தான் அடி இணைகளே என்று செந்திறத்த தமிழில் பாடிமகிழ்கிறார் வேதம் தமிழ் செய்த நம் மாறன் சடகோபன்!

இங்ஙனம் அனைத்து ஆழ்வார்களும் காட்டியருளியபடி **ஆலினிலையாய் அருள்** என்று நாமும் அவனருள் ஒன்றையே வேண்டி நிற்போம்!

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# புண்ணியனின் புகழ்பாடும் புனிதன்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

திவ்யஸூரிகள் என்று போற்றப்படும் ஆழ்வார்களின் அனுபவப்பெருக்கான பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்ய ப்ரபந்தம். திவ்ய ப்ரபந்த பாசுரங்கள் அனைத்தும் எம்பெருமான் விஷயமானதே இரண்டைத் தவிர்த்து, ஒன்று, மதுரகவியாழ்வார் அருளிச் செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு. மற்றொன்று ஆசார்யர்களில் ஒருவரான திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த இராமானுசநூற்றந்தாதி. இவையிரண்டும் அருளிச் செயல்களின் அடைவில் இடையிலும், கடையிலும் சேர்க்கப்பட்டுள்ளன.

ரத்னஹாரத்தில் நாயகரத்னம் இடையில்தான் அமைந்திருக்கும். நிபத்த நாயக ஸ்ரீ என்று ஸ்வாமி தேசிகன் குருபரம்பரை என்னும் ஹாரத்தின் நடுநாயகமாக யதிராஜர் ப்ரகாசிக்கின்றார் என்றல்லவோ போற்றுகின்றார்! எனவே அருளிச் செயல்களில் ஆசார்யனை விஷயமாகக் கொண்ட இவ்விரண்டு ப்ரபந்தங்களும் மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன!

**திருவரங்கத்தமுதனார் அவதாரம்**

தேவுமற்றறியேன் குருகூர்நம்பி என்று ஆசார்ய நிஷ்டையில் நிலைத்து நின்று ஆசார்ய மஹிமையை உணர்த்தும் மதுரமான பாசுரங்களை அருளிச் செய்தார் மதுரகவியாழ்வார். அதேபோல் ஆசார்யனின் பெருமை பேசவந்த இராமானுச நூற்றந்தாதி என்கிற ப்ரபந்தம் திருவரங்கத்தமுதனாரால் அருளிச் செய்யப்பட்டது.

இவர் பங்குனி மாதம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் அவதரித்தவர்.. பெரியகோயில் நம்பி என்று பூர்வத்தில் திருநாமம் கொண்டிருந்த இவர் திருவரங்கத்தில் கோயில் காப்பாளாராகவும் பௌரோஹித்யம் செய்து கொண்டும் இருந்தார்.

**எம்பெருமானாரின் அபிமானத்தைப் பெறுதல்**

அவ்வமயம் ஆளவந்தாருக்குப் பின் திருவரங்க கோயில் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்ற ஸ்வாமி ராமானுஜர் அக்கோயில் நடைமுறைகளில் பல நல்ல மாற்றங்களைக் கொண்டுவந்தார். எம்பெருமானாரின் கோயில் சீர்திருத்த முயற்சிகளை முதலில் பெரியகோயில் நம்பிகள் ஆதரிக்கவில்லை. பின்னர் எம்பெருமானின் கருணையால், எம்பெருமானாரின் சிஷ்யரான கூரத்தாழ்வானால் திருத்தி பணிகொள்ளப்பட்டவர் அநுகூலராகி எம்பெருமானாரின் அருளுக்கு பாத்ரபூதரானார். ஆழ்வானும் பெரியகோயில் நம்பியைத் தம் உபதேசத்தால் ராமானுஜரின் திருவடிகளைப் பற்றும்படி செய்தார்.



**இராமானுச நூற்றந்தாதி தோற்றமும் ஏற்றமும்**

எம்பெருமானின் க்ருபாகடாக்ஷத்தால் பெரியகோயில் நம்பி எம்பெருமானாருடைய திருவடிகளின் மஹிமையை உணர்ந்து அவரது திவ்ய குணங்களை உலகோர் அறிந்து போற்றி உய்ய வேண்டும் என்று கருணையுள்ளம் கொண்டு எம்பெருமானார் விஷயமாகவே 108 பாசுரங்கள் அருளிச் செய்தார். அதை நம்பெருமாள் மற்றும் பாஷ்யகாரர் திருவடிவாரத்தில் ஸமர்ப்பித்தார். எம்பெருமானும் அதை உகந்து ஏற்றுக்கொண்டான். இதனை ஸ்வாமி ராமானுஜர் அங்கீகரித்ததோடு அல்லாமல் எம்பெருமான் திருவுள்ளம் அறிந்து, எவ்விதம் நம்மாழ்வார் விஷயமான கண்ணிநுண் சிறுத்தாம்பு பூர்வர்களால் முதலாயிரத்தில் சேர்க்கப்பட்டதோ அவ்விதமே இயற்பாவின் முடிவில் இந்த ப்ரபந்தத்தை சேர்த்து எப்பொழுதும் ஸேவிக்கும்படி நியமித்தருளினார்.

இதுவே ஸ்ரீவைஷ்ணவர்களால் போற்றப்படும் நிகரற்ற ராமானுச நூற்றந்தாதி! ஒவ்வொரு பாசுரத்திலும் ஸ்வாமி இராமானுஜரின் திருநாமமும், புகழும், வைபவமும் இடம் பெற்றிருக்கும் அற்புதமான ப்ரபந்தம். அமுதனார் அருளிச் செய்த இராமானுச நூற்றந்தாதி பல சிறப்புகளைக் கொண்டது. எம்பெருமானரின் புகழ் பாடப் பெற்ற

ப்ரபந்தம்! அவராலேயே அங்கீகரிக்கப்பட்ட தனிச்சிறப்பை உடையது. மேலும் எம்பெருமான் மற்றும் ஆழ்வார்களின் திருவுள்ளத்திற்கேற்ப இது அமைந்துள்ளதால் நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களுடன் சேர்த்து இணைக்கப்பட்டது! ஆழ்வார்களுக்குப் பிற்பட்டவரானாலும் ராமானுஜரின் புகழ் பாடும் இந்நூலை திவ்யப்ரபந்தத்துடன் இணைத்திருப்பது இதன் ஏற்றத்தினைப் பறை சாற்றுகின்றது.

யதிராஜரின் புகழ் பாடுவதாக இருந்தாலும், ஆழ்வார்களின் பெருமைகளையும் அவர்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களின் மேன்மையையும் உள்ளடக்கியது என்று பெரியோர் பணிப்பர். உபவீத தாரிகளுக்கு காயத்ரி மந்த்ரம் போன்று, ப்ரபந்நர்களால் தினமும் ஸேவிக்கத் தகுந்ததான ப்ரபந்தம் என்கிற பெருமையையும் உடையது. **ப்ரபந்ந காயத்ரி** என்றே போற்றப்படுகிறது. எம்பெருமானார் இவரது அபார கவிதா ஸாமர்த்யத்தைக் கண்டு அமுதனார் என்னும் திருநாமம் சாற்றினார். அதுமுதல் இவருக்கு **திருவரங்கத்தமுதனார்** என்ற திருநாமமே நிலைத்தது.

**ப்ரபந்தத்தின்பெருமை**

ஒரு க்ரந்தம் சிறப்பாக அமைய வேண்டும் என்றால் மூன்று அம்சங்கள் முதல் தரமாக இருக்க வேண்டும் என்று கூறுவர். ஆசிரியரின் சிறப்பு, பொருளின் சிறப்பு மற்றும் க்ரந்தத்தின் சிறப்பு என்பன! அதன்படி இப்ரபந்தம் வக்த்ரு வைலக்ஷண்யம், விஷய வைலக்ஷண்யம், க்ரந்த வைலக்ஷண்யம் என்ற மூன்று பெருமையையும் தன்னுள்ளே கொண்டது.

**முன்னை வினையகல மூங்கில்குடி அமுதன்** என்கிற தனியன் பறை சாற்றுவதற்கேற்ப உயர்ந்த குலப்பெருமையை உடையவர். அநாதி காலமாகத் திரண்ட பாபங்கள் அனைத்தும் அகன்றன அமுதனாரது திருவடித்தாமரைகளை தலைக்குமேல் அணிகலனாக வைத்துக்கொண்டதால் என்பதாக இவருடைய மேன்மை சொல்லப்பட்டது. ஆக முதல் தனியனால் வக்த்ரு வைலக்ஷண்யம் உணர்த்தப்படுகின்றது.

**நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்று நண்ணினர்பால் சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாளிணைமேல்** என்னும் இரண்டாவது தனியன் நூலின் நாயகனான ஸ்வாமி ராமனுஜரின் திருவடிகளின் பெருமையைச் சொல்வதாக அமைந்துள்ளது. அதாவது அற்பமான உலகியல் இன்பமெல்லாம் இழிவானவை என்று உணர்ந்தவர்களுக்கு அனைத்து ஜயங்களைத் தரக்கூடியது புகழ் மிக்க இராமனுசனின் திருவடிகளே என்பதால் ஸ்வாமி ராமானுஜரின் பாதகமலங்களின் மேன்மையே இப்ரபந்தத்தின் விஷயம் என்பதன் மூலம் விஷய வைலக்ஷண்யம் குறிக்கப்படுகின்றது.

**சொல்லின் தொகை கொண்டு உனதடிபோதுக்குத் தொண்டு செய்யும் நல்லன்பரேத்தும் உன் நாமமெல்லாம் என்தன் நாவினுள்ளே** என்கிற மூன்றாவது தனியன் ப்ரபந்த வைலக்ஷண்யம், அதாவது நூலின் சிறப்பை வெளியிடுவதாக அமைந்துள்ளது

ஒவ்வொரு பாட்டிலும் இராமானுசனின் திருநாமம் அமைந்திருப்பது இப்ரபந்தத்தின் தனிச்சிறப்பு. அடியார்கள் ஏத்தும் இராமானுசனது திருநாமங்கள் தம் நாவில் நித்யவாஸம் செய்யும்படி அருள வேண்டும் என்று திருக்குருகைப்பிரான் ப்ரார்த்திப்பதாக அமைந்துள்ளது.

**அமுதனாரின் அனுபவமும் உபதேசமும்**

தம் ஆசார்யரான ஆழ்வானிடமும் அவருடைய ஆசார்யனான உடையவரிடமும் மிகுந்த பக்தி கொண்டிருந்தார் அமுதனார்.

*என்னைப் புவியில் ஒரு பொருளாக்கி, மருள்சுரந்த*
*முன்னைப் பழவினைவேரறுத்து, ஊழி முதல்வனையே*
*பன்னப் பணித்த இராமனுசன் பரன் பாதமும் என்*
*சென்னித் தரிக்கவைத்தான் எனக்கு ஏதும்*
*சிதைவில்லையே. [4]*

இப்பாசுரத்தில், தன் ஆசார்யனான கூரத்தாழ்வானை போற்றிப் பாடுகிறார். மற்றும், **மொழியைக் கடக்கும் பெரும்புகழான்** என்கிறபாசுரத்திலும் தினவடங்கத் தம் ஆசார்யனின் குணங்களின் பெருமையைப் பேசுபவர், முதலில் ஸ்வாமி ராமானுஜரின் எல்லையில்லாத கீர்த்தியைக் கவிபாடவியலாது என்று கலங்கிய அமுதனார், தமக்கு கூரத்தாழ்வான் தொடர்பு இருப்பதாலே முடியாதது ஒன்றுமில்லை என்று துணிவு கொண்டு அவர் புகழ் பாடுவதில் இழிகிறார். இவ்விதம் அமுதனார் தம் ப்ராசார்யனான பாஷ்யகாரரின் பெருமைகளை போற்றிப் புகழ்வது அவர் மேல் கொண்ட அளவிலடங்கா பக்தியினாலும் மற்றும் இத்தால் தம் ஆசார்யனான கூரத்தாழ்வானின் திருவுள்ளம் உகக்கும் என்பதாலுமே!. அமுதனாரின் ஆசார்ய நிஷ்டையின் உயர்வும் சொல்லிலடங்காது என்று கூறினால் மிகையாகுமா?

**பேறொன்றும் மற்றில்லை நின்சரணன்றி** என்னும் பாசுரத்தில் தமது திருவடிகளே உபாயமும் பலமும் என்று நான் விரும்புமாறு எம்பெருமானார் செய்தருளிய உபகாரத்தை வாசகமிட்டுச் சொல்லவொண்ணாது என்கிறார் அமுதனார். **நின்ற வண்கீர்த்தியும் நீள்புனலும்** என்னும் பாசுரத்தில் பகவத் ராமானுஜருக்கு திருவேங்கடமும், பரமபதமும், பாற்கடலும் எவ்வளவு பேரின்பத்தைத் தருமோ அவ்வளவே ஸ்வாமியின் திருவடித் தாமரைகளால் தமக்கு உண்டாகும் என்பதால் அதைத் தந்து அருளவேண்டும் என்று ப்ரார்த்திக்கின்றார். இவ்விரண்டு பாசுரங்களையும் வைத்து நடாதூர்அம்மாள் எம்பெருமானாரே ப்ராப்ய-ப்ராபகங்கள் என்று அறுதியிட்டார்.

உண்ணும்சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலை

எல்லாம் கண்ணன் என்று இருந்தவர்கள் ஆழ்வார்கள். ஸ்வாமி ராமானுஜருக்கு அவ்வாழ்வார்களின் திருவடிகளே தாரகமாயும், போஷகமாயும், போக்யமாயும் இருந்தனவாம். ஆழ்வார்களின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு உயர்ந்த ராமானுஜரின் திருவடிகளைப் பற்றிக்கொள்வதே நாம் உய்யவழி என்கிறார் அமுதனார். இக்கொடிய, வலிய கலியின் கொடுமைகளைக் கடக்க இராமானுசன் புகழ்பாடுவதே நலம் என்று பரக்கப் பேசுகிறார். இராமானுஜர் திருவடிகளே நமக்கு ப்ராப்யம். அத்திருவடிகளைப் பெற அவர் புகழ் பாடுவோம்! அவர் திருநாமங்களைச் சொல்வோம்! நாம் மன்னி வாழநெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே! என்று நம்மையும்தான் அழைக்கின்றார் திருவரங்கத்தமுதனார்.

**குலம்தரும், செல்வம் தந்திடும்...** என்று நாராயண நாமத்தைச் சொல்வதால் பெறும் பயனைப் பட்டியலிடுகிறார் கலியன். அதுபோல் இராமாநுச நாமத்தைச் சொல்வதால் என்ன பயன்? அமுதனாரின் அற்புதமான பதில் இதோ:

*தவந்தரும் செல்வம் தகவும்தரும் சலியாப் பிறவிப்*

*பவந்தரும் தீவினை பாற்றித்தரும் பரந்தாமமென்னும்*
*திவம்தரும் தீதில் இராமாநுசன் தன்னைச்*
*சார்ந்தவர்கட்கு உவந்தருந்தேன் அவன் சீரன்றியான்*
*ஒன்றும் உள்மகிழ்ந்தே. [94]*

தம்மை பற்றியவர்களுக்கு ப்ரபத்தி நிஷ்டை முதல் பரமபதம் வரை அனைத்தும் கொடுக்கவல்லது இராமானுச நாமஜபம் என்கிறார் அமுதனார்.

**இராமானுச நூற்றந்தாதியும் பிள்ளையந்தாதியும்**

எவ்வாறு நாலாயிர திவ்ய ப்ரபந்தத்திற்கு நிறைவான ப்ரபந்தமாக அமுதனாரின் நூற்றந்தாதி அமைந்துள்ளதோ அவ்வாறே ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ள தேசிக ப்ரபந்தத்திற்கு நிறைவான ப்ரபந்தமாக அமைந்துள்ளது ஸ்வாமி தேசிகனின் திருக்குமாரர் ஸாதித்திருக்கும் பிள்ளையந்தாதி! இது ஸ்வாமி தேசிகனின் பெருமையைப் பேச வந்த ப்ரபந்தம். இப்ரபந்தம் பெரும்பாலும் இராமானுச நூற்றந்தாதியை அடியொற்றியதென்பர் உரையாசிரியர்கள்.

இராமானுச நூற்றந்தாதியின் முதல் பாசுரத்தைத் தழுவியே பிள்ளையந்தாதியின் முதல் பாசுரம் அமைந்திருப்பது ரஸிக்கத் தக்கது.

*பூமன்னு மாதுபொருந்திய மார்பன்:*
*மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன்*

மற்றும்

*புகழ்மலிந்த பாமன்னு மாறன் அடி பணிந்துய்ந்தவன்:*
*தொல்லருள் மாறன் துணையடிக் கீழ்*

என்பதாக பாசுரத்தின் போக்கு அமைந்ததுள்ளது.

அமுதனாரின் மேன்மைமிகு சரித்ரத்தில் ஒரு சில துளிகளை அனுபவித்தோம். இவர் ஆசார்ய நிஷ்டையில் நிலை நின்று எம்பெருமானார் மற்றும் ஆழ்வானின் அருளுக்குப் பாத்ரமானவர். இந்த புனிதன் காட்டிய வழியைப் பின்பற்றி நாமும் அப்புண்ணியனின் புகழைப் பாடியும் திருநாமங்களைச் சொல்லியும் பயன் பெறுவோமாக!


# ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**

# Important Tenets Of Our Sampradaya (24)

## Guidelines To Be Followed by An Acharya And A Sishya

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

It is well known that Swami Desika's masterpiece 'Srimath Rahasya-thraya Saaram' optimally covers all the salient features of the Visishtaadvaitha philosophy. The treatise consists of four parts — Arththaanusaasana (import of important tenets), Sthireekarana (sorting things out), Padha-Vaakya Yojana (syntax, semantics and etymology) and Sampradaya Prakriya (adherence to tradition).

The last-named section comprises three chapters — obligations of the mentor, obligations of the disciple and the conclusion. We shall take a brief look at the first two.

The mentor-disciple relationship is the cornerstone of Srivaishnava Sampradaya. The Saasthras have prescribed the ideal qualities of the Acharya and disciplines to be followed by the Sishya.

**Obligations of a mentor**

- The primary obligation of an Acharya is to master the philosophy.
- The logical end to the above is imparting the wisdom so attained to eligible and deserving students.
- Passing of such knowledge must be discrete and direct, as provided in the Saasthras. It should not be heard by those to whom it is not intended.
- He must ensure that the wisdom is shared only with disciples of impeccable character.
- He must remember that he is in possession of a unique treasure (knowledge) and strive to keeping it intact.

**Duties of a disciple**

- He should strictly uphold and follow the principles and values of our tradition.
- He should look to gain knowledge out of passion and dedication.
- He should not share his knowledge with anyone for the sake of money or rewards.
- He should not share the benefits of his learnings to detractors.
- He must, all the time, keep his Acharya's thoughts in his mind and recall with gratitude his benediction when he teaches his students.
- He should never try to learn through self-study and approach an Achaya for the same.

Following the above guidelines, whether one is a mentor or a disciple, is of paramount importance and it will not only enhance the value of our Sampradaya but also individually benefit us in our spiritual pursuit.

*(to be continued…)*

| பங்குனியில் முக்கிய உத்ஸவங்கள் |
|---|
| **பல்லவ உத்ஸவம் (3 நாட்கள்)**<br>மார்ச் 23 (ஞாயிறு) முதல் 25 (செவ்வாய்) வரை |
| **ஸ்ரீ ராமர் உத்ஸவம் (9 நாட்கள்)**<br>மார்ச் 29 (சனி) முதல் ஏப்ரல் 6 (ஞாயிறு) வரை |
| **யுகாதி உத்ஸவம்**<br>மார்ச் 30 (ஞாயிறு) |
| **ஸ்ரீ ராம நவமி**<br>ஏப்ரல் 6 (ஞாயிறு) |
| **பங்குனி உத்தரம்**<br>ஏப்ரல் 11 (வெள்ளி) |
| **ஊர்கோல உத்ஸவம்**<br>ஏப்ரல் 12 (சனி) |
| **சித்திரை வருஷப்பிறப்பு**<br>ஏப்ரல் 14 (திங்கள்) |

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners (24)

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter - 23**

**Siddhopaayana Sodhana Adhikaram**

Swami clears doubts regarding Bhagavan standing in place of Bhakti as Upaaya in this chapter.

The Prapanna may not have clarity upon Thathvas, Upaaya etc., and stumble in his path causing disfavour with Isvara and he is corrected because of three reasons. They are:

1. Bhagavan's words accepting his Prapatti ("Asthu they" in Saranagati Gadhyam);
2. Acharyan's Anugraham; and
3. Sathsampradaya siddhhi.

About Sadacharya Anugraham, it can be seen in the anecdotes of Parashara Rishi, sage Maithreya, Sanjaya in Mahabaratha and so on.

Sathsampradaya Siddhi means, this Prapanna gets Upadesha from a Sadacharyan who has no concern for fame, profit, etc., upon Thathvas without needless detailing or skipping essentials. This Upadesa is enough for non-eligible but devoted persons and further Sastraic studies could be taken up by those who wish to enlighten others.

Those who question everything with just logic as their criteria (who follow Kanaadha, Buddha, etc) go against the Vedas and thus they steal the wealth of Bhagavan or the idea of Bhagavan Himself by saying there is no Sarvesvara or by showing someone else as Isvara or denying his wealth (Vibuthi) or saying that the Jagath is independent of Him or dependent upon a Jeeva and so on.

It is better for a soft-natured Prapanna to avoid mingling with such people as he would be misled, and it would be similar to losing a thing again which was lost and found only recently. If not, it would lead to displeasure of Bhagavan.

Now, Swami counters arguments upon the Bhagavan's independence and compassion, the need for Prapatthi, etc.

1. Since Bhagavan is the Independent One and the Compassionate One, He will give Moksham of his own accord. What is the need for a rite? To avoid the accusations of discrimination and cruelty, He causes this opportunity of a rite, to give Moksham. Otherwise as all beings are His and He has to give everyone. He will give Phalan only as per karmas, and the ever-flowing karmas exist in everyone and thus, He needs a rite to differentiate among them.
2. Swami Nammalwar said "You let me loiter all these days and now you accepted me. Why did you delay?" For which the Bhagavan did not answer. Why? is the question by some. For a Chethana to be in Leela Vibuthi, the main cause is Isvara's Independence. The supplementary reason is his misdeeds from his karmas. To propel him to Nitya Vibuthi the main cause is His Compassion. The supplementary reason is the Upaaya which serves to allay His disfavour, answers Swami.
3. Independence in a cruel person is harmful. A dependent person's compassion is not fruitful, thus causing sorrow to him and others. Bhagavan is both Independent and Compassionate thus redeeming us.
4. Bhagavan is just acting out emotions like sorrow etc. in His Avatarams and He is eternally blissful. He is the Protector, Commander, Holder, and the Ultimate goal. Swami goes on the list the benefits we receive because of His compassion.
5. He is the Siddhopaayam meaning existing cause for Moksham. Bhakti and Prapatthi are Sadhyopaayam meaning doable causes for His favour.
6. Hence, those who held that Prapatthi is not a Upaaya meant that He is the real cause and main Upaayam. Since, we are entitled to Moksham by nature of our svarupam, if His displeasure is removed by means of Upaaya then we automatically attain our goal.

7. When Isvara is the Seshi and we are subservient to Him and dependent on Him like new-born children, shouldn't He protect us, as a mother feeds her child upon his cries and does not expect any payment for it? If we do a rite, is it not disbelief in Him and against our subservient Svarupa? say some Acharyas. All the sastras and Anushtanams of our Acharyas establish that He requires an Upaaya from us and hence, that a Chetana is Sesha and should not try to protect himself was said as an accolade to Bhagavan's protection and if it is indeed not so, Moksha would apply to all beings which is self-defeating.

8. Some said it is enough to learn the eternal connection with Bhagavan and no separate rite is needed. This is untrue. He protects those who don't know the connection and also who cannot even know it like Achethanam. If that knowledge is needed because it is said so in sastras, then Prapatthi is also a Gnana Visesham which should be accepted. Some held that it is enough not to obstruct when Bhagavan protects us. If so, then in deep sleep we would not deny and that would cause Moksham to all. They replied that not obstructing when he is in a state of awareness to deny was needed and Swami counters saying we see that he protects those who have no possibility of denying, like Achethanam, animals etc.

9. Some Acharyas have held that we have no job participating in a rite for protection of our Athma when He is the Ultimate Protector. Swami clarifies that One who has submitted his Atma has nothing further to do in terms of his protection. Even the Prapatthi he did before was caused by Bhagavan and a Prapanna cannot think that he did it out of his own volition to protect his Atma. The Prapanna should know that by some fortunate occurrence, Bhagavan caused the Prapatthi and pleased by it, He protects.

10. Further, even if a mother feeds the child without expecting anything in return, the new-born also has to make an effort to feed from the mother's breast and thus a Chetana performing the Upaaya will not impact his Svarupa adversely.

11. Swami goes on to clarify about Piratti's role in Upaayam and Upeyam. Just as Bhagavan's attributes like mercy, compassion play a part in Him being Upaayam, Piratti also is jointly the Upaayam and not Purushakaram alone. The mithunam (inseparableness) of Piratti and Perumal is also the Prapyam. This is proved in various Pramanas like Alwar paasurams, Acharya slokas, Vishnu Puranam, Sounaka Samhithai, etc.

12. The joint Upaayatvam and Upeyatvam does not take away from the "Eka" sabdam mentioned in Vedas etc. Just as the sun and the sun's rays both have luminosity and the offerings in a yagna is submitted to two Devathas, we surrender unto both Piratti and Perumal and there is no contradiction. Again, Swami quotes various Pramanas for this. Thus, Narayana is to be contemplated upon along with Sri only, avers Swami Desikan.

***(to be continued…)***


**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத் திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**

4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,

மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஶ்ரீ:




## *With Pranams:*

**Sriram Seshadri**
2B, Ramaniyam Srichakra,
3/5, Jagadambal Colony 2nd Street,
Royapettah, Chennai 600 014.

**SVDD thanks Sri Sriram Seshadri**
**for sponsoring this month's issue of Desika Sandesam**





## பாதுகா ஸஹஸ்ர உத்ஸவம்









## ஹரி நாம வைபவம் - நாம ஸங்கீர்த்தனம்





சதமான மஹோத்ஸவ மலர் வெளியீட்டு விழா